சுருக்கம்

பாசனம் – பெரியாறு வைகை பாசனம் 2009–2010 – மதுரை, தேனி மற்றும் சிவகங்கை மாவட்டங்களிலுள்ள பெரியாறு பாசனப் பகுதியில் இருபோக பாசன நிலங்களில் இரண்டாம் போக பாசன நிலங்களுக்கும், ஒரு போக பாசன நிலங்களுக்கும் மற்றும் திருமங்கலம் பிரதானக் கால்வாயின் கீழ் உள்ள ஒருபோக பாசன நிலங்களுக்கும் பாசனத்திற்கு வைகை அணையிலிருந்து 23.10.2009 முதல் 1.3.2010 வரை தண்ணீர் திறந்துவிடுதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (ப்பி 1) துறை

அரசாணை (வாலாயம்) எண் 521

நாள் 23.10.2009
ஐப்பசி 6
திருவள்ளுவர் ஆண்டு 2040

படிக்கப்பட்டது:

1. நீர்வள ஆதாரத்துறை மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் கடித எண் முவஅ 2/ 6461–1/ 2009, நாள் 15.10.2009 மற்றும் 20.10.2009.
2. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் நேர்முகக் கடித எண் விவ2 / 77110/ 2009, நாள் 20.10.2009.
3. தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் கடித ந.க. எண் 44551/ 2009/ ஜி 2, நாள் 20.10.2009.

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளரின் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளின் அடிப்படையில், அவரது செயற்குறிப்பினை ஏற்று, மதுரை, தேனி மற்றும் சிவகங்கை மாவட்டங்களிலுள்ள பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள இருபோக நிலங்களின் இரண்டாம் போக பாசனப் பரப்பாகிய 45,041 ஏக்கர் நிலங்களுக்கும், ஒருபோக பாசனப் பரப்பாகிய 85,563 ஏக்கர் நிலங்களுக்கும் மற்றும் திருமங்கலம் பிரதானக் கால்வாயின் கீழ் உள்ள ஒருபோக பாசனப் பரப்பாகிய 19,439 ஏக்கர் நிலங்களுக்கும் சேர்த்து மொத்தம் 1,50,043 ஏக்கர் நிலங்களுக்கு, தற்சமயம் பெரியாறு பங்கீட்டு கணக்கிலுள்ள நீர் இருப்பு மற்றும் எதிர்பார்க்கும் நீர்வரத்து ஆகியவற்றினை கருத்தில் கொண்டு, 23.10.2009 முதல் 1.3.2010 வரை வைகை அணையிலிருந்து (முறைப் பாசன முறையில்) விநாடிக்கு 1800 கனஅடி வீதம் 10,837 மில்லியன் கனஅடி தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம், மதுரை.2.
மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி.

மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை.
மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை, சென்னை.5.

நகல்–
முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை.9.
இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை.5.
இ.கோ./உ.ந.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

23/10/2009
பிரிவு அலுவலர்